விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதி மயிலம், வல்லம் ஆகிய ஊராட்சி ஒன்றித்தின் சார்பில் ரூ.29.16கோடி மதிப்பீட்டில் 805பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கு பணி ஆணைகளை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.வழங்கினார். உடன் ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தரணிவேந்தன்,மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன்,தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா ,மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மயிலம் சிவக்குமார், மணிமாறன், வல்லம் உதயகுமார், இளங்கோவன்,ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன் துரை இளம்வழுதி ஆகியோர் உள்ளனர்.

தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் சட்டமன்ற தொகுதி பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் கீழ வடகரை ஊராட்சியில் மே தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பிர் கே.எஸ்.சரவணகுமார் தலைமையில் நடைபெற்றது உடன் வடக்கு ஒன்றிய செயலாளர் எல் எம்.பாண்டியன். வட்டாட்சியர் ஊரக வளர்ச்சி அலுவலர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

உளுந்தூர்பேட்டை – கூவாகம் ஏரியில் தவறி விழுந்து உயிரிழந்த

சிறுவன் - சிறுமியின் பெற்றோருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி உதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே. 5-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கூவாகம் ஏரியில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவன் மற்றும் சிறுமியின் பெற்றோர்களுக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், ஆவிகொளப்பாக்கம் குறுவட்டம், வடக்கு நெமிலி கிராமத்தைச் சேர்ந்த திரு.ராஜேந்திரன் மற்றும் திருமதி கண்மணி தம்பதியரின் மகள் செல்வி ஜெயலெட்சுமி (வயது 10) மற்றும் விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர் வட்டம், டி. எடையார் கிராமத்தைச் சேர்ந்த விஜி மற்றும் திருமதி சினேகா தம்பதியரின் மகன் செல்வன் நித்தேஷ் (வயது 5) ஆகிய இருவரும் நேற்று (3.5.2025) மதியம் சுமார் 2.00 மணியளவில் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கூவாகம் கிராமத்தில் உள்ள கூவாகம் ஏரியில் தவறி விழுந்து மேற்படி சிறுவனும், சிறுமியும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் மற்றும் சிறுமியின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த

இரு குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமை! செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. படப்பை ஆ.மனோகரன் பங்கேற்பு!

மாங்காடு நகர வர்த்தக அணி ஏ.ஜோதி பிரகாஷ் - எஸ்.சோனியா திருமண வரவேற்பு!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் வாழ்த்து!

காஞ்சிபுரம்,மே 5-

மாங்காடு நகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் ஏ. ஜோதி பிரகாஷ், எஸ். சோனியா

ஆகியோரது திருமண விழா வரவேற்பு இன்று (05.05.2025) திருமுருகா திருமண மண்டபம் சிக்கராயபுரத்தில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பிற்கு மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமை வகிக்கிறார்.

சுசிலா ராதாகிருஷ்ணன், அனிதா, பிரியதர்ஷினி, எஸ்.பி. லிங்கத்தாய், எம். ஆர்.சீனிவாசன், இ. ராமு, ஆர்.சாரதி ஆகியோர் வரவேற்பு ரையாற்றுகின்றனர்.

மணவிழா வரவேற்பில் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன் வாழ்த்துரை வழங்குகின்றார்.

இதில் சட்டமன்ற உறுப்பினர் கு. செல்வப் பெருந்தகை, குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன்,

திருமதி சுமதி முருகன், எம்.ஆர். வெங்கடேசன், ஏ.கே. அப்துல் ரகுமான், ஆர். பாஸ்கரன், எம்.எஸ். மகேந்திரன், ஜி.எம். வில்லியம், கே.ஜி. சங்கர், எம். எஸ். கதிரவன், டி. பெருமாள்ராஜ், சரளா விஜயகுமார், கா. ராஜேஷ், ஜி. ஞானவேல், தம்பிதுரை, எஸ். எஸ். செல்வராஜ், எஸ். நளினி, சாந்தி சம்பத்ராம், பியாரி, லட்சுமணன், சரிதா ஞானவேல், கா. மு.இஸ்மாயில், சி. தனசேகர், மேனகா கணபதி, சரஸ்வதி சீனிவாசன், அனுசுயா சத்தியசீலன், மோசீனா அபிபுர் ரஹ்மான், யாஸ்மின் ஜபருல்லா,

எஸ். துரை, என்.சம்பத், என். விஜயகுமார், பி. அவினாஷ், கே. கனகராஜ், கே. பரசுராமன், வி. பிரகாஷ், எம்.பிரபு, ஜி. மஹாலிங்கம், எஸ். ராஜசேகர், ஸ்ரீதேவி, முருகையன், கணேஷ், ராஜசேகர், சரவணன், சுந்தரமூர்த்தி, எம். எம். கணபதி, ஆர். தனசேகர், டி.ரமேஷ், வெங்கடேசன், தியாகராஜன், எம்.ஜி. ரகு, எம்.எஸ்.ரகு, புருஷோத்தமன், கே. இஸ்மாயில், எம்.கே. பார்க், கோபி, ஜீவா, அக்ரம், ஹரிஹரன், ஏ.கோபி, சுசில்; குமார், வல்லரசு, பாபுலால், கவுதம், நளினி புண்ணியகோட்டி, லதா; கலைச்செல்வி, வள்ளி, ஈஸ்வரி, அன்னக்கிளி மற்றும் வார்டு கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

எம். கோபி, ஏ.ஆறுமுகம், எஸ்.சந்தோஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

‘திராவிட மாடல்’ ஆட்சியில் தேவனாம்பட்டினம் கடற்கரையில்

இயற்கைச் சீற்றங்களைத் தடுக்க நடவடிக்கை எடுத்த முதல்வருக்கு நன்றி!

சட்டப்பேரவையில் – கடலூர் கோ.ஐயப்பன் பேச்சு!

சென்னை, மே 5-

சட்டப்பேரவையில் பள்ளி, உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கையில் கடலூர் தொகுதி உறுப்பினர் கோ.ஐயப்பன் பேசுகையில், கடலூர் கடற்கரையில் இயற்கை சீற்றங்களை தடுக்க நடவடிக்கை எடுத்த முதல்வருக்கு நன்றி தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் பள்ளி, உயர்கல்வித்துறை மானியத்தில் கடலூர் தொகுதி உறுப்பினர் கோ. ஐயப்பன் பேசியதாவது:-

முதல்வர் அவர்களையும், இளைஞர்களின் எழுச்சி நாயகன், இன்று விளையாட்டுத் துறையிலே தமிழகத்திற்கு பெருமைகளை சேர்த்துக் கொண்டிருக்கிற எங்களுடைய துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். அமைச்சர் பெருமக்களையும், சக சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்கி, எங்களுடைய மாவட்டக் கழகச் செயலாளர், வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

இரு மொழிக்கொள்கை முதல்வர் உறுதி!

இரண்டாயிரம் கோடி ரூபாய் அல்ல, நான்காயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும், எடுத்துக்கொண்ட கொள்கையிலே முன்வைத்த காலை பின்வைக்க மாட்டோம் என்று ஒன்றிய அரசுக்கு இன்று சவால் விட்டு செயலாற்றிக் கொண்டிருக்கும் நம்முடைய முதல்வர் அவர்கள், மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான் பணம் தருவோம் என்ற அந்த நிர்பந்தத்தை ஏற்காமல் இருமொழிக் கொள்கைதான் எங்களுடைய தமிழ்நாட்டின் உயிர்நாடி என்ற அளவிலே இன்று புரட்சி செய்து கொண்டு, தமிழகத்தை காத்துக்கொண்டு ஆசிரியப் பெருமக்களுக்கு எவ்வளவு ஊதியம் வேண்டுமோ, எண்ணற்ற சலுகைகள் என்னென்ன வேண்டுமோ அத்தனையும் வழங்கி நாங்கள் இருக்கின்றோம், தமிழ்நாடு அரசு இருக்கிறது என்ற நிலையிலே இன்று அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறார்கள். முதல்வர் அவர்கள்,

“அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே”

என்று ஒன்றிய அரசுக்கு அடிபணியாமல் எடுத்துக் கொண்ட காரியத்தை சிறப்பாக செயல்படுத்தி தமிழ் மக்களை, தமிழக மாணவர்களை வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற எங்களுடைய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் நூற்றாண்டு நூலகம். முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரிலே சர்வதேச தரத்திலான கலைஞர் நூற்றாண்டு நூலகம் 218.19 கோடி ரூபாய் செலவிலே மதுரையில் அமைக்கப்பட்டுள்ளது. இது வரை 3 இலட்சத்து 64 ஆயிரத்து 521 புத்தகங்களுடன் செயல்பட்டு வரும் அந்த நூலகத்தை 202425 ஆம் ஆண்டிலே 16 இலட்சத்து 55 ஆயிரத்து 820 வாசகர்கள் வருகை தந்து சிறப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். புத்தக கண்காட்சிகள் புத்தக வாசிப்பை ஒரு மக்கள் இயக்கமாக ஊக்குவித்து சென்னை புத்தக கண்காட்சி போன்று அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற 202223 ஆம் ஆண்டு கல்வியாண்டு முதல் புத்தக கண்காட்சிகள் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றன.

வேளாண்மை பல்கலைக்கழகம்!

1989-91-ஆம் ஆண்டிலே கலைஞர் ஆட்சியில் பெண்களுக்கு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கி சாதனை செய்த தலைவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். 2006-2007-ஆம் கல்வியாண்டில் கலைஞர் ஆட்சிக் காலத்தில் பெண்களுக்கு முதுகலை படிப்பு வரை இலவச கல்வி வழங்கப்பட்டு, அவர்களெல்லாம் பயில்வதற்கு ஒரு வாய்ப்பாக பெண்கள் பயிலுகின்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தித் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். 1989-91- ஆம் ஆண்டிலே ஆதி திராவிட மாணவ - மாணவியர்களுக்கு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வியை வழங்கி சிறப்பு செய்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

1.6.1971-ஆம் ஆண்டு ஆசிய கண்டத்திலே முதன்முறையாக கோயம்புத்தூரில் தமிழ்நாடு வேளாண்மைப் அறிவியல் பல்கலை க்கழகம் முத்தமிழறிஞர் ஆட்சிக்காலத்தில்தான் தொடங்கப் பட்டது.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில். 20.9.1989 அன்று ஆசிய கண்டத்திலேயே முதன்முறையாக சென்னையில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது, முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில். இவ்வாறு கழக அரசு ஆட்சி அமைக்கும்போதெல்லாம், என்றும் மாணவ மாணவியருக்கு படிப்பதற்கு வசதியாக, அதிக அளவில் சிறப்பு செய்கின்ற வகையில், கல்வி நிலையங்கள் ஒவ்வொன்றாக உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த வகையில், 1989-ஆம் ஆண்டில் டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டது. 7.9.1990ல், திருநெல்வேலியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. 17.9.1997 அன்று சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. 20.9.1997 அன்று இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னையில், டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. 2008-ஆம் ஆண்டில் சென்னையில், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இப்படி, படிப்படியாக, கழக ஆட்சியில் எண்ணற்ற கல்விச் சாலைகள், பல்கலைக்கழகங்கள் திறக்கப்ப ட்டன.

எப்போதெல்லாம் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகின்றனவோ, அப்போதெல்லாம் பாதிப்புக்கு உள்ளா கிற நகரமாக எங்கள் மாவட்ட தலைநகரமான கடலூர் திகழ்ந்துகொண்டி ருக்கிறது. அந்தவகையில், கடலூரில் கடல் சீற்றங்கள் அதிக அளவில் ஏற்பட்டு, இன்றைக்கு மக்களின் இல்லங்களைத் தேடி கடலலைகள் வந்து கொண்டிருக்கின்றன. 300 மீட்டர் மணற்பரப்பில் இன்று 100 மீட்டர் மணற்பரப்புகூட இல்லாத அளவில், இன்று கடல் நீர் வீடுகளில் உட்புகுந்து கட்டடங்களை சேதப்படுத்துகின்றன.

2006-2011-ஆம் ஆண்டின் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், நான் வைத்த கோரிக்கையை ஏற்று, கோரிக்கை தான். வேறு ஏதும் இல்லை. முழுவதும் படிக்கவில்லை. தொகுதி சம்பந்தமாக ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

கடல்நீர் உட்புகாமல் தடுத்தல்!

நான் வைத்த கோரிக்கையை ஏற்று, நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், 3.00 கோடி ரூபாயில் தாழங்குடா விலிருந்து தேவனாம்பட்டினம் கடற்கரைப் பகுதியில் கற்களைக் கொட்டி அந்த மக்களைப் பாதுகாத்தார்கள். இன்று தேவனாம்பட்டினம், சோழங்குப்பம், சிங்காரத்தோப்பு வரை மீண்டும் கடல் அரிப்பு ஏற்பட்டு, அப்பகுதியிலுள்ள வீடுகளில் உட்புகும் அளவிற்கு தண்ணீர் வரத்து அதிக அளவில் இருக்கிறது. அப்பகுதி மீனவ மக்கள் இன்று இரவு நேரங்களில் எப்போது வேண்டுமானாலும் வீடுகளில் தண்ணீர் உட்புகுந்துவிடும் என்ற நிலையில், இரவு முழுவதும் உறங்காமல் கண்விழித்துக் கொண்டிருக்கின்ற நிலை உள்ளது. Indonesiaவில் பூகம்பம் என்றால், இங்கு எப்போது சுனாமி வருமோ என்ற ஏக்கத்துடன் அவர்கள் இரவு முழுவதும் தூங்க முடியாத நிலை இருந்துகொண்டிருப்பதால், அப்பகுதியிலும் கற்களைக் கொட்டி, கடல் நீர் ஊருக்குள் வராமல் இருப்பதற்கு எங்களுக்கு உதவி செய்து பாதுகாக்குமாறு, நீர் வளத் துறை அமைச்சர் அவர்களையும், மீன்வளத் துறை அமைச்சர் அவர்களையும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் வேண்டி, விரும்பி, மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் தான், 3.00 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, 2006 ஆம் ஆண்டில் எங்களுக்குப் பெருமை சேர்த்தார்கள், மக்களைப் பாதுகாத்தார்கள். அந்த வகையில், இந்த இக்கட்டான நேரத்திலும், 9 உறுப்பினர்கள் பேசக்கூடிய நிலையிலும், எனக்கு 5 நிமிடங்கள் பேச வாய்ப்பளித்த முதலமைச்சர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், கடலூர் தொகுதியைச் சார்ந்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கோ.ஐயப்பன் பேசினார்.

தென்காசி வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தென்காசி.மே.5

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் இன்று (05.05.25 ம் தேதி திங்கட்கிழமை) மாலை 5 மணி அளவில் சங்கரன் கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள தென்காசி வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.என தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

தென்காசி வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று 5 ம் தேதி திங்கள் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள்,ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள்,தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. 03052025 அன்று நடைபெற்ற கழக மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தின் தீர்மானங்கள் குறித்தும்.

2.கழக வளர்ச்சி பணிகள்

தொடர்பாகவும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் குடியாத்தம் ஒன்றிய பெருந்தலைவரும், வடக்கு ஒன்றிய செயலாளருமான என்.இ.சத்யானந்தம் அவர்களது தாயார் திருமதி. என்.இ.லட்சுமி அம்மாள் இயற்கை எய்தினார் அதை அறிந்து வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் எம.பி. நேரில் சென்று அவரது உடலுக்கு மலர் மாலை அணிவித்து தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்து அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள், நகர கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பலர் உள்ளனர்.

தஞ்சை வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் கழகத் தலைவர்

முதல்வருக்கு நன்றி தெரிவித்து மாபெரும் பொதுக்கூட்டம்!

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா சிறப்புரை! அமைச்சர் கோவி.செழியன், சு.கல்யாணசுந்தரம் எம்.பி பங்கேற்பு!

தஞ்சாவூர் மே.05.

மே தின விழா மற்றும் கும்பகோணத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் வழங்கியதற்கும், ஆளுநருக்கு எதிராக பல்கலைக் கழக சட்டத்திருத்தம் உள்ளிட்ட10 மசோதாவிற்கு

உச்ச நீதிமன்றம் மூலம் தீர்ப்பை பெற்றமைக்கும் கழகத் தலைவருக்கு பாராட்டு மற்றும் நன்றி அறிவிப்பு மாபெரும் பொதுக்கூட்டம் கும்பகோணத்தில் இன்று 05.05.2025 திங்கள் மாலை 06.00 மணிக்கு கும்பகோணம் சாரங்கபாணி கீழவீதி, மார்னிங் ஸ்டார் பள்ளி அருகில் நடைபெற உள்ளது.

தொழிலாளர் அணி, மாவட்ட தொ.மு.ச கவுன்சில் தலைவர் மாடாகுடி வை.செல்வராஜ் தலைமையில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்தில், மாவட்ட தொழிலாளர் அணி எஸ்.பாரி வரவேற்புரையாற்றுகிறார்.

மாவட்ட கவுன்சில் செயலாளர் கு.சேவியர், துணை அமைப்பாளர்கள் யு.நீலநாராயணன், என். ராமதாஸ், எஸ்.சக்திவேல், துரை.சதீஸ்குமார், கோ.ரகுபதி, இரா.சேரலாதன், ஜெ.குமரேசன், எஸ்.செந்தில் ஆறுமுகம், என்.சந்திரமோகன், எஸ். மணிமாறன், பி.அருண் ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளனர்.

இப்பொதுக்கூட்டத்தில் கழக துணைச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

இதில் தொ.மு.ச பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் உள்ளிட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள், கழக பிரதிநிதி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் பங்கேற்க உள்ளனர்.

பொதுக்கூட்ட நிறைவில் மாவட்ட தொழிலாளர் அணி துணைத் தலைவர் கோ.க.அருள் நன்றியுரையாற்ற உள்ளார்.